## 1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## O.S.No.512/2021

2026 வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. காசிப்பாண்டி | மாவட்டம் | திருநெல்வேலி |
| க.பெ / த.பெ | திரு. மயிலேறி | கிராமம் | பாளையங்கோட்டை |
| வயது | 70 | | |

05.08.2026 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணைக்கான சாட்சியத்தை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. எனது வழக்கறிஞர் மூலம் 04.12.2021 ம் தேதியிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் – வா.சா.ஆ.1

2. எனது வழக்கறிஞர் மூலம் 08.12.2021 ம் தேதியிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ஒப்புகை இரசீது அசல் – வா.சா.ஆ.2

3. திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் மாநகராட்சி மூலம் எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பின் அசல் – வா.சா.ஆ.3

4. 05.12.2011 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் கணினி சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.4

5. எனது வழக்கறிஞர் மூலம் 09.11.2020 ம் தேதி அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ஒப்புகை இரசீது அசல் – வா.சா.ஆ.5

6. எனது சட்ட அறிவிப்பை இணை இயக்குநர் திருநெல்வேலி அவர்கள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் – வா.சா.ஆ.6

7. மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலக இணை இயக்குநர் எனக்கு அனுப்பிய அறிவிப்பின் அசல் – வா.சா.ஆ.7

8. எனது வழக்கறிஞர் மூலம் 08.12.2020ம் தேதி அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ஒப்புகை இரசீது அசல் – வா.சா.ஆ.8

9. கடந்த 19.12.2020ம் தேதி கையொப்பமிட்டு மாவட்ட நகர ஊரமைப்பு இணை இயக்குநர் எனக்கு அனுப்பிய அறிவிப்பின் அசல் – வா.சா.ஆ.9

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணையானது தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition Uploaded on 05.08.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.08.05 17:27:02 +0530

**1 வது கூடுதல் மாவட்ட**
**உரிமையியல் நீதிபதி**
**திருநெல்வேலி**